முருகப்பெருமான் துணை

**மகான் கபிலர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

29.07.2021, வியாழக்கிழமை

1. பாரப்பா கலியுக மக்களே
பக்குவம் தரும் அரங்கமகான்
கூறுகின்ற தரும ஞானவழியை
குறையிலா ஏற்று வந்தால்தான்
2. வந்தால்தான் உலக மாற்றம்
வையகம் அடையுமெனக் கூறி
சிந்தைபட துல்லிய ஆசிதனை
செப்பிடுவேன் பிலவ நள்ளி திங்கள்
3. திங்களிலே முன்னான்கோர் திகதி குருவாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 13ம் நாள், 29.07.2021 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு கபிலர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் சரவண ஜோதியே நமோநம என
4. என செபதபம் செய்துவர
எளியவர்க்கு பசிபிணி விரட்டும்
தினசரி அன்னதான சேவை
தொடர்ந்து உலகினில் செய்துவர
5. வருகின்ற இந்த சேவை வழிதான்
வையகம் மாற்றம் பெறக் கூடும்
தருகின்ற மக்களின் ஆதரவு
தவராஜன் வழிதனில் பெருகிட
6. பெருகிட கலியினில் மாற்றம்
பெருமைபட அரங்கன் சக்தியாக
தருமவடிவாக கண்டடைய நேரும்
தனவான்கள் தயவுநிலை கூட்டி
7. கூட்டியே பிரணவக் குடிலினில்
குறைவிலா தொடர்பு கொண்டு
தட்டாது பொருளுதவி செய்து
தருமத்தை காத்து வளர்த்து வர
8. வருகவே உலக வறுமைகள்
வக்கிர கொடுஞ் செயல்களும்
முருகப் பெருமான் வழிபாட்டால்
முழுமையான தருமபலம் தன்னால்

9. தன்னிலே அகன்று மேவியே
தனித்துவ மிக்க வளர்ச்சியும்
அன்னதானம் செய்ய செய்யவே
அளவிலா இயற்கைவளம் பெருகி

10. பெருகியே கழனி வகைவிருத்தியோடு
பிசகில்லா சிறு குறுந் தொழில்களும்
பெருந் தொழில்வளர்ச்சிகளும் கூடி
பொருளாதார வகை தன்னிறைவு காணும்

11. காணவே அரங்கன் கொள்கை
கருணையாகி அன்னதானமாகி
ஞான அமுதாகி மக்களிடை கலந்து
ஞானிகளை உருவாக்கிட நேரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–